படிமுறை 3 -  ஏற்பிசைவு செய்யப்பட்ட விடுபாடுகளைப் பிரயோகித்தல்

படிமுறை 4 -  பொருத்தமான வரி வீதத்தைப் பிரயோகித்தல்

படிமுறை 5 -  காலப்பகுதிக்கான ஒத்திவைக்கப்பட்ட வரி நகர்வினை ஏற்பிசைவு செய்தல்

**உதாரணம் 2**

ரூ.200 கிரயமுள்ள ஒரு சொத்தானது ரூ.150 கொண்டுசெல்லல் பெறுமதியைக் கொண்டிருக்கிறது. வரி நோக்கத்திற்கான திரள் தேய்மானம் ரூ.100 உம் வரி வீதம் 30% உம் ஆகும்.

சொத்தின் வரி அடிப்படை - ரூ.50 (150 -100)

தற்காலிக வேறுபாடு - ரூ.100 (கொண்டுசெல்லல் பெறுமதி 150 – வரி அடிப்படை 50)

**ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு – 100 x 30% = ரூ. 30**

**உதாரணம் 03**

பின்வரும் தரவுகள் Lloyd PLC மற்றும் Cole PLC இடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்:

| | Lloyd PLC | Cole PLC |
|---|---|---|
| 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் | ரூ.1 300 000 | ரூ.136 000 |
| 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிவிதி வருமானம் | 340 000 | 150 000 |
| 2016 ஏப்ரல் 1 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | — | 90 000 |
| 2016 ஏப்ரல் 1 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | — | 15 000 |
| 2017 மார்ச் 31 இல் வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் | 960 000 | 306 000 |
| 2017 மார்ச் 31 இல் விலக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் | — | 70 000 |

சகல வரிவிதிக்கத்தக்க மற்றும் விலக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளும் இலாபம் அல்லது நட்டத்துடன் தொடர்புடையவை. நிறுவன வரி வீதம் 30% எனக் கருதுக.

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றின் வருமான வரிப் பகுதியினைத் தயாரிக்குக.

**விடை**

LLOYD PLC

**2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (பிரித்தெடுப்பு)**

| | |
|---|---|
| வருமான வரிக்கு முந்தைய இலாபம் | Rs.1 300 000 |
| வருமான வரிச் செலவு (குறிப்பு) | (390 000) |
| ஆண்டிற்கான இலாபம் | 910 000 |

குறிப்பு:

*வருமான வரி*

*(a) வருமான வரிச் செலவின் பிரதான பாகங்கள்*

| | |
|---|---|
| நடப்பு வரி (340,000 x 30%) | ரூ.102 000 |
| தற்காலிக வேறுபாடுகள் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி (960,000 x 30%) | 288 000 |
| வருமான வரிச் செலவு | 390 000 |

COLE PLC

**2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (பிரித்தெடுப்பு)**

| | |
|---|---|
| வருமான வரிக்கு முந்தைய இலாபம் | ரூ.136 000 |
| வருமான வரிச் செலவு (குறிப்பு) | (40 800) |
| ஆண்டிற்கான இலாபம் | 95 200 |

குறிப்பு:

*வருமான வரி*

*(a) வருமான வரிச் செலவின் பிரதான பாகங்கள்*

| | |
|---|---|
| நடப்பு வரி (150,000 x 30%) | ரூ..45 000 |
| தற்காலிக வேறுபாடுகளின் எதிரிடை மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி – w 01 (6,000 – 1,800) | (4 200) |
| வருமான வரிச் செலவு | 40 800 |

W 01

| | | |
|---|---|---|
| 2017 மார்ச் 31 இல் வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் | ரூ. | 306 000 |
| 2017 மார்ச் 31 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு (306,000 x 30%) | ரூ. | 91 800 |
| 2016 மார்ச் 31 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | | 90 000 |
| ஆண்டிற்கான ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பின் அதிகரிப்பு | ரூ. | 1 800 |
| 2017 மார்ச் 31 இல் விலக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் | ரூ. | 70 000 |
| 2017 மார்ச் 31 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து (70,000 x 30%) | ரூ. | 21 000 |
| 2016 மார்ச் 31 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | | 15 000 |
| ஆண்டிற்கான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தின் அதிகரிப்பு | ரூ. | 6 000 |

**உதாரணம் 04**

Bag PLC இன் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் ரூ.900,000 ஆகும். பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| 31 மார்ச்சில் | 2017 | 2016 |
|---|---|---|
| வருமதிக் கணக்குகள் | ரூ. 245 000 | ரூ. 200 000 |
| ஐயக்கடன்களுக்கான விடுதொகை | (20 000) | |
| பொறி – கிரயத்தில் | 600 000 | 600 000 |
| திரள் தேய்மானம் | (190 000) | (120 000) |
| வட்டி வருமதிகள் | 10 000 | 20 000 |
| சென்மதிக் கணக்குகள் | 48 000 | 62 000 |
| பணிக்கொடை ஏற்பாடு | 44,000 | 32,000 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | ? | 21 600 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | ? | 20 000 |

a) வட்டி வருமானமான ரூ.10 000 ஆனது 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

b) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செலவுகள் பின்வருமாறு:

- தண்டங்கள் ரூ.10 000
- பொறிக்கான தேய்மானச் செலவு ரூ.70 000
- ஐயக்கடன் செலவு ரூ.20 000

c) வரி நோக்கங்களுக்கான பொறி மீதான திரள் தேய்மானம் 2017 மார்ச் 31 இல் ரூ.280 000 ஆக இருப்பதுடன் அது 2016 மார்ச் 31 இல் ரூ.180 000 ஆக இருந்தது. நடப்பு ஆண்டின் காலப்பகுதியில் பொறிகள் எதுவும் கொள்வனவு செய்யப்படவோ அல்லது விற்பனை செய்யப்படவோ இல்லை.

d) நிறுவன வரி வீதம் 30%.

aat SRI LANKA

**2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நடப்பு மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினைக் கணிக்குக.**

**விடை**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நடப்பு வரி வேலைத்தாள்

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| கணக்கீட்டு இலாபம் | | 900 000 |
| *கூட்டு:* | | |
| தண்டங்கள் | 10 000 | |
| தேய்மானச் செலவு - பொறி | 70 000 | |
| ஐயக்கடன் செலவு | 20 000 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு (44,000 -32,000) | 12,000 | |
| பெற்ற வட்டி | 20 000 | 132,000 |
| *கழி:* | | |
| வரித் தேய்மானம் - பொறி | 100 000 | |
| வட்டி வருமானம் | 10 000 | 110 000 |
| வரிவிதி இலாபம் | | 922 000 |
| நடப்பு வரிப் பொறுப்பு @ 30% | | 276,600 |

***செய்முறைகள்***

வட்டி வருமதி

| | | Rs. | | | Rs. |
|---|---|---|---|---|---|
| 1/04/16 | ஆரம்ப மீதி | 20 000 | | **பெற்ற வட்டி** | **20 000** |
| | வட்டி வருமானம் | 10 000 | 31/03/17 | இறுதி மீதி | 10 000 |
| | | 30 000 | | | 30 000 |

திரள் தேய்மாயம் – வரி நோக்கங்களுக்காக

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | 1/04/16 | ஆரம்ப மீதி | 180 000 |
| 31/03/17 | இறுதி மீதி | 280 000 | | **வரித் தேய்மானம்** | **100 000** |
| | | 280 000 | | | 280 000 |

ஒத்திவைக்கப்பட்ட வரி வேலைத்தாள் - 2017 மார்ச் 31 இல்

| | **கொண்டு செல்லல் பெறுமதி** | **வரி அடிப்படை** | **வரிவிதிக்கத் தக்க தற்காலிக வேறுபாடுகள்** | **விலக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள்** |
|---|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | | | |
| வருமதிக் கணக்குகள் (நிகர) | 225 000 (245 -20) | 245 000 | | 20 000 |
| பொறி (நிகர) | 410 000 (600-190) | 320 000 (600-280) | 90 000 | |
| வட்டி வருமதி | 10 000 | 0 | 10 000 | |
| **<u>பொறுப்புகள்</u>** | | | | |
| சென்மதிக் கணக்குகள் | 48 000 | 48,000 | | 0 |
| பணிக்கொடை ஏற்பாடு | 44,000 | | | **44**,000 |
| **மொத்த தற்காலிக வேறுபாடு** | | | 100 000 | 64 000 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு 30% | | | 30 000 | |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து 30% | | | | 19,200 |
| ஆரம்ப மீதி | | | 20 000 | 21 600 |
| **அதிகரிப்பு/(குறைவு)** | | | 10 000 | (2,400) |

*ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பின் எதிரிடை(Reversal) = 10000-2400 = 7,600*

*2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வரி*
*= 276,600 +7600 = 284,200*

## வரி நட்டங்கள்

பயன்படுத்தப்படாத வரி நட்டங்களை முன்கொண்டு செல்லுமிடத்து, நட்டங்களை எதிரீடு செய்வதற்கு எதிர்காலத்தில் இருக்கக்கூடிய வரிவிதி இலாபங்களை விரிவாக்குவதற்காக ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து ஒன்றினை ஏற்பிசைவு செய்ய முடியும்.

உரிமம் ஒன்று எதிர்காலத்தில் வரிவிதி இலாபங்களைக் கொண்டிருப்பதை எதிர்பார்க்க வில்லையாயின் அது தனது சொந்தக் கணக்குகளிலுள்ள சொத்தினை ஏற்பிசைவு செய்ய முடியாது.

உரிமமானது குழுமம் ஒன்றின் பகுதியாக இருந்து, வரி நட்டங்களை மற்றைய குழுமக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கக்கூடியதாகவும் இருப்பின், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து ஒருங்கிணைந்த கணக்குகளில் ஏற்பிசைவு செய்யப்படலாம்.

சொத்தானது பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்ட வரி நட்டங்களை வரி வீதத்தினால் பெருக்குவதற்குச் சமனாக இருக்கிறது.